**மத்திய மாகாண அரச சேவையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பப் பிரிவு 03 சேவைப் வகுதியில் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்குஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

மத்திய மாகாண அரச சேவையில் தொழிநுட்ப உதவியாளர் தரம் III பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமிருந்தும் திறந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 34 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2026.01.16** ஆகும்.

02. **சேவை நிபந்தனைகள்** :-

2.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்

2.2 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யத் தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு, மத்திய மாகாண அரச சேவையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பப் பிரிவு 03 சேவைப் வகுதியில் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III பதவிக்கு.நியமிக்கப்படுவர்.

2.3 அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

2.4 தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மத்திய மாகாணத்தில் வெற்றிடம் நிலவும் நிறுவனங்களுக்கு இணைக்கப்படுவர்.

2.5 பதவி சார் அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

2.6 இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் நியமனம் வழங்கப்பட்ட சேவை நிலையத்தில் கடமைப் பொறுப்பேற்கும் திகதியிலிருந்து ஆகக்குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும்.

03. **சம்பள அளவுத்திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இன் MT 1- 2025 சம்பளத் தொகுதிற்கமைய சம்பள அளவுத்திட்டம் ரூபா. 50,090 -10x540 -11x630- 10x1010- 10x1190 – ரூபா. 84,420/- ஆகும். நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து இச்சுற்று நிரூபத்தின் உப அட்டவணை III இற்கமைய சம்பளம் செலுத்தப்படும்.

04. **பூரணப்படுத்தியிருக்க வேண்டிய தகைமைகள்** : -

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதாவது 2008.01.16 திகதி அல்லது அதற்கு முன்னதாக மற்றும் 1991.01.16 திகதிக்கு அல்லது அதற்கு பின்னரான திகதியை பிறந்த திகதியாக கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.)

III. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

IV. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தில் வசிப்பவருக்கும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தினுள் நிரந்தர வதிவுடைய மற்றும் மத்திய மாகாணத்தில் 03 வருடங்களுக்கு அதிகமான நிரந்தர வதிவினைக் கொண்ட துணையினைக் கொண்ட விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர், இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வசிக்கும், தகைமையுடையை விண்ணப்பதாரர்களின் புள்ளிகளின் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் மத்திய மாகாண சபையினுள் 05 வருடங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

V. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

VI. ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவராவார்.

VII. கீழ் குறிப்பிட்டுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

கல்வித் தகைமைகள்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு (06) பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமைகள் :-

பொது நிருவாக சுற்று நிரூபம் 01/2012 இன் அடிப்படையில் உரிய தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 05 இற்கான பாடநெறிச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் இத்தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்

05. **ஆட்சேர்ப்பு முறை** :-

I. மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர். (நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.) அத்துடன் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக குறைந்தது 40% புள்ளிகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள். பரீட்சையில் காட்டும் திறமையின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

II. திறமை ஒழுங்கு வரிசையின்படி வெற்றிடங்களை நிரப்பும் போது யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்று தகைமைப் பெற்று இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தில் நிலவுகின்றதெனில், அவ்வாறு சமமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் இருந்து மேலதிகமாக தெரிவு செய்வது தொடர்பில் தீர்மானம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ள முடியும். இதன்போது அரச சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் ஏற்புகள் மற்றும் தேர்வு நடைமுறையின் அடிப்படையில் சம புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரர்களின் திறமைகளை மதிப்பிடுவதற்கான எழுத்துப் பரீட்சை ஒன்றினை மாத்திரம் நடாத்தி உரிய தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

III. இப்பதவியில் உள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

06. **பரீட்சைத் தொடர்பான விபரங்கள்** :-

I. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவத்தில் தான் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திற்கு உரிய குறியீட்டினைக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

II. பரீட்சார்த்திகள் பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

III. பரீட்சையை நடாத்தல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

IV. பரீட்சை நிலையம்: இப்பரீட்சை **கண்டியில் மாத்திரம்** நடாத்தப்படும்.

V. பரீட்சை பாடவிதானம்

| **பாடங்கள்** | **காலம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்தியடைவதற்கான புள்ளிகள்** |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | இப்பத்திரமானது பரீட்சார்த்தியின் பொது விவேகம், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்யும் திறமை என்பவற்றை பரீட்சிப்பதற்கும் தீர்மானிப்பதற்குமான வினாக்களைக் கொண்டிருக்கும் |
| தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம் | இவ்வினாப்பத்திரமானது கட்டிட நிர்மாணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், திட்டங்களை வடிவமைத்தலும் அதனை விளங்கிக் கொள்ளுதலும், மதிப்பீடுகளைத் தயாரிக்கும் ஆற்றல், நீர் விநியோகம், வடிகாலமைப்பு முறைமைகள், கழிவகற்றல் முறைகள் ஆகியன தொடர்பாக பரீட்சார்த்தி கொண்டுள்ள அறிவினை அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். |

07. **விண்ணப்பிக்கும் முறை**: -

I. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ-4 (A4) அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 04 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 07 முதல் 11 வரை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணம் செலுத்தியிறாத, சரியாக பூர்த்தி செய்திறாத, முழுமையற்ற மற்றும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பிலான இழப்பினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றினை வைத்திருப்பது உசிதமாதாகும்.

II. விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து கொள்ளும்போது பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

III. அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண சபைக்கு செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்தினை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு அல்லது முன்னதாக மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிறப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். வேறு வருமான தலைப்பிற்கு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் மத்திய அரசாங்கத்திற்குரிய மஞ்சள் நிற பற்றுச்சீட்டை ஒட்டி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது. அத்துடன் பரீட்சைக் கட்டணமாக முத்திரை மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**மத்திய மாகாணம் அல்லாத வெளி மாகாணங்களில் நிரந்தர பதிவினைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் பின்வரும் நடைமுறையினைக் கையாள வேண்டும்.**

- தமது பரீட்சைக் கட்டணத்தை நாட்டின் எப்பகுதியிலேனும் உள்ள மக்கள் வங்கிக் கிளையின் மூலமாக கண்டி மக்கள் வங்கியில் பேணப்படும் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் இல. 003-1-001-0-0006004 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவுவைத்து கிடைக்கப்பெறும் வைப்புச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும்.
- வங்கி வைப்புச் சீட்டினை நிரப்பும் போது கணக்குரிமையாளரின் பெயரிற்கு "செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு" எனக் குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் பெயர், முகவரி, தொலைப்பேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் காரணம் என்பதற்கு "மத்திய மாகாண அரச சேவையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பப் பிரிவு 03 சேவைப் வகுதியில் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025" எனக் குறிப்பிட்டு வைப்புச்சீட்சை பூரணப்படுத்தி அனுப்புதல் கட்டாயமாகும்.

IV. விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரச / மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

V. இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "**செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி**" என்ற முகவரிக்கு **2026.01.16** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"மத்திய மாகாண அரச சேவையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பப் பிரிவு 03 சேவைப் வகுதியில் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III** பதவிக்கு **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025"** எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் சேவையாற்றும் சேவை நிலையம் மற்றும் பதவி என்பனவையே பரீட்சை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதுடன் விண்ணப்பம் அனுப்பிய பின்னர் அது தொடர்பாக ஏற்படும் எந்தவித மாற்றங்களும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

VI. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது.

VII. விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்துகையில் மிகவும் அவதானமாக சரியான தகவல்களை மாத்திரம் வழங்குதல் வேண்டும். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்திஉரிய பற்றுச் சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமை தகவுத் திறமையை ஏற்றுக் கொண்டதென அமையாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது, அறிவித்தலுக்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என அறியப்படும் சந்தர்ப்பத்தில், அவரது பரீட்சார்த்தியுரிமை இரத்து செய்யப்படும்.

VIII. பரீட்சை நிலையம் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைமூலம் அறியத் தரப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அனுமதி அட்டையானது பரீட்சை நடைபெறுவதற்கு14 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கையடக்க தொலைபேசிக்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

IX. அறிவிப்பு வெளியாகி 04 அல்லது 05 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் காரியாலயத்திற்கு அறிவித்தல் வேண்டும். தொலைபேசி இல. 081 – 2213097/ மின்னஞ்சல் முகவரி psc.cp.gov@gmail.com

08. இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் மாத்திரம் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். பரீட்சையினை நடாத்தல் தொடர்பில் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறும் பட்சத்தில், மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் நேரிடும்.

09. **அபேட்சகரின் ஆளடையாளம்**

இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

- ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள்அடையாள அட்டை
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

- அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் ஏதும் பாவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**

10.1 இப்பரீட்சைக்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம்.

10.2 பரீட்சார்த்தியொருவர் வேண்டுமென்றே பிழையான தகவலை சமர்ப்பித்துள்ளாரென தெரியவருகையில் அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்துள்ளாரென பின்னர் தெரியவருகையில், அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கனவனத்திற் கொள்ளப்படமாட்டாது, அத்துடன் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படலாம் அல்லது அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. இப்பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும்

12. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள/ குறிப்பிடாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம், இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்குறியதாகும். மேலும், இந்த அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்து தெளிவுபடுத்துவது / முடிவெடுப்பது மத்திய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

13. இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி

கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2025 டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி